30th July 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதை லாபகரமாக நடத்துவதற்கு நம் அரசாங்கம் ஆந்திரா அரசாங்கத்திடம் தெரிவித்த யோசனைகள் என்னென்ன? அவைகளில் எதை ஆந்திர சர்க்கார் நிராகரித்தது? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் இதற்கு முன்பு பதில் சொன்னபோது சபையில் இல்லை என்று நினைக்கிறேன். இதைத் திரும்பவும் சொல்லுகிறேன். இங்கிருந்து போகின்ற பஸ் அன்றைய தினமே சென்னைக்குத் திரும்பி வரவேண்டும் என்று சொன்னோம். அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாவது இங்கிருந்து போகின்ற பஸ்களுக்கு சர் சார்ஜ் போடக் கூடாது என்று கேட்டோம். அதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, முன்பு ஒரு முறை நமது தொழில் அமைச்சர் அவர்கள் அரசாங்கம் பஸ் நடத்துவது லாபத்தை மட்டும் உத்தேசித்து அல்ல, மக்களுக்கு நன்மை செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள் என்று இந்தச் சபையிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் திருப்பதிக்கு இரண்டு பஸ்களையாவது ஓட்டுவதற்கு அனுமதித்து, அதை நஷ்டமில்லாது, லாபகரமான முறையில் ஓட்டுவதற்கு ஏதாவது சீர்திருத்தம் செய்து பஸ்களை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்திற்குள்ளே இருக்கும் திருத்தணிக்கு பஸ் விடவேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம். இன்னொரு ராஜ்யத்திலிருக்கும் இடத்திற்கு நாம் நஷ்டத்திலேயே பஸ் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று சொல்வது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : அரக்கோணத்திலிருந்து திருப்பதிக்குப் போய்க் கொண்டிருக்கின்ற பஸ்கள் எல்லாம் அன்றைக்கே திரும்பி வந்துவிடுகின்றன. அப்படியிருக்கும்போது, சர்க்கார் பஸ்கள் மட்டும் அங்கேயே நிற்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்களே அதற்கு என்ன காரணம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. அது அவர்கள் போட்டிருக்கும் விதி.

திரு. எம். எஸ். மணி : இந்த மாதிரி மாநில அரசாங்கங்களுக்கிடையே தகராறுகள் ஏற்படும்போது, இதை ஏன் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லித் தீர்த்துக் கொள்ளக் கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது அவசியமில்லை.

சென்னை-தஞ்சாவூர் மார்க்கத்தில் அரசாங்க பஸ்கள்

*35 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு எத்தனை சர்க்கார் பஸ்கள் விடப்படுகின்றன?

[30th July 1965

(இ) 15—3—1965-ல் வழக்கமாக விடப்படும் பஸ்கள் விடப் பட்டனவா ?

(உ) ஆம் எனில், அவை யாவும் குறித்த காலத்தில் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There are 8 buses on the route with 4 buses from either end.

(b) Yes.

(c) No.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், 15—3—1965 அன்று சென்னையி லிருந்து புறப்பட்ட தஞ்சாவூர் எக்ஸ்பிரஸ் பஸ், பாண்டிச்சேரி மெடிக்கல் காலேஜ் அருகில் போய் நின்றுவிட்டது. காலையில் நின்றுபோன பஸ் மாலை வரையிலும் போவதற்கு வேறு பஸ் அனுப்பப்படவில்லை. நான் அந்த பஸ்ஸிலேயே பிரயாணம் செய்தேன். இப்போது அமைச்சர் அவர்கள் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் இடையிலே நின்று விட்டால் உடனடியாக ஸ்பேர் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்பேர் பஸ் விடுவதுதான் சர்க்காருடைய நடவடிக்கை, அவ்விதம் தான் செய்து கொண்டி ருக்கிறது. அன்றையதினமும் ஸ்பேர் பஸ் விடப்பட்டது. ஆனால் காலதாமதமாயிற்று என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஏனென்றால், சென்னையிலிருந்து பஸ் வர வேண்டியிருந்தது.

திரு. பி. முருகையன் : சென்னையிலிருந்து தஞ்சாவூர், நாகப்பட் டினம் செல்லுகின்ற பஸ்கள் கடலூரில் சிற்றுண்டிக்காக ஒரு ஹோட்டல் சமீபத்தில் நிறுத்தப்படுகிறது. கடலூரில் 'பிருந்தா வனம்' என்ற ஹோட்டலில் பஸ்ஸில் வருகின்ற டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் இலவசமாக (ப்ரீ) சிற்றுண்டி கிடைக்கிறது என்பதற்காக அங்கேயே நிறுத்திவிடுகிறார்கள். அதே நேரத்தில் பிரயாணிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை டிரைவர்கள், கண்டக்டர்கள் கவனிப்பதில்லை. இதைச் சர்க்கார் கவனித்து பிரயாணிகளுக்கு வசதியான இடத்தில் பஸ்களை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர் கள் கேட்கின்ற கேள்வி எனக்குப் புரியவில்லை. டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் இலவசமாகச் சிற்றுண்டி கொடுக்கக் கூடாது என்று உத்தரவு போடச் சொல்லுகிறார்களா அல்லது எல்லா பிர யாணிகளுக்கும் பிருந்தாவனம் ஹோட்டலில் இலவசமாகச் சிற் றுண்டி கொடுக்க வேண்டும் என்று சொல்லச் சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. இதெல்லாம் சிறிய அட்மினிஸ்ட்ரேஷன் காரியம். இதில் நாம் தலையிடுவது சரியல்ல.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, கடலூரில் பஸ் களை நிறுத்தும் இடத்திற்கு சமீபத்திலுள்ள ஹோட்டலில் பிரயாணிகளுக்கு சில நேரங்களில் போதுமான அளவு உணவு

30th July 1965]

கிடைப்பதில்லை. அம்மாதிரி நிறுத்தப்படுகிற இடத்தை மாற்றினால் என்ன என்று தான் திரு. முருகையன் அவர்கள் கேள்வி கேட்டார்கள். பிரயாணிகளுக்கு உணவு கிடைக்க வசதியாக இருக்கும் இடத்தில் பஸ்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி தனியாக கடிதம் எழுதி அனுப்பினால் சர்க்கார் அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னையிலிருந்து தஞ்சாவூர், நாகபட்டினம், சேலம் முதலிய இடங்களுக்குப் போகின்ற பஸ்கள் சுமார் 8 இருக்கும், இவைகள் எல்லாம் கடலூரில், இந்த ஒரே இடத்தில் தான் வந்து நிற்கின்றன. சில நேரங்களில் இட நெருக்கடி காரணமாகப் பிரயாணிகளுக்குச் சரியானபடி உணவு கிடைப்பதில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதே சபையில் கடலூரில் தனியாக ஒரு பஸ் ஸ்டான்ட் கட்டுகிறோம், ஹோட்டல் போன்ற வசதிகளுடன் ஒரு புதிய பஸ் ஸ்டான்ட் கட்டுகிறோம் என்று 1963-ம் வருடம் பட்ஜெட் உரையில், மேஜை மீது வைத்த குறிப்பின் மீது சொல்லியிருக்கிறார்கள். இப்போது இரண்டு வருடங்களாகியும் தனியாக இந்த பஸ் ஸ்டான்ட் அமைக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோட்டல் வைக்க வேண்டும் என்று சர்க்கார் சொல்லவில்லை. பஸ் ஸ்டான்ட் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. நிதி வசதி கிடைத்தவுடன் பஸ் ஸ்டான்ட் அமைக்கப்படும்.

பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம்

* 36 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் பெட்ரோல் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று நிறுவும் திட்டம் எந்த அளவுக்கு இதுவரை நிறைவேற்றப் பட்டுள்ளது ?

(இ) மத்திய அரசாங்கம் அதற்காக ஒதுக்கியுள்ள நிதி எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Site Selection Committee appointed by the Government of India to investigate and recommend a place for the establishment of an oil refinery in Madras State has selected the Manali village near Madras for the establishment of the oil refinery. The lands are under acquisition.

(b) This Government have no further information.